பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண்.93 நாள் : 13.07.2019

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாரம்பரிய இசை, கலை மற்றும் கலாச்சாரங்களை பொதுமக்களிடையே கொண்டு செல்ல பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

= = =

யுனெஸ்கோ (UNESCO) அமைப்பு சமூக, பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் சுற்று சூழலை அடிப்படையாக கொண்டு, படைப்பாற்றலை முக்கிய காரணியாக கொண்டதாக அறியப்பட்ட நகரங்களின் நிலையான வளர்ச்சிக்காக சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் கடந்த 2004–ஆம் ஆண்டு **"படைப்பாற்றல் திறன் கொண்ட நகரங்களுக்கான ஒருங்கிணைப்பு"** (Unesco Creative Cities Network-UCCN) அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. யு.சி.சி.என்.(UCCN)–ஆனது கைவினைப் பொருட்கள் மற்றும் நாட்டுப்புற கலை, வடிவமைப்பு, திரைத்துறை, பாரம்பரிய உணவுகள், இலக்கியம், ஊடக கலை மற்றும் இசைத்துறை ஆகிய ஏழு துறைகளில் படைப்பாற்றலை அடிப்படையாக கொண்ட 180 நகரங்களை உள்ளடக்கியுள்ளது.

படைப்பாற்றலை உந்து சக்தியாக கொண்ட நகரங்களாக அங்கீகரிக்கப்பட்ட நகரங்களின் நிலையான வளர்ச்சிக்கு சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துவதே யு.சி.சி.என். (UCCN)ன் முக்கிய நோக்கமாகும். பொதுத்துறை நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் (Civil socities) உதவியுடன் படைப்பாற்றலை முக்கிய காரணியாக கொண்டு நகர்புற வளர்ச்சிக்காக உறுப்பு நகரங்கள் முன்னெடுக்கும் முயற்ச்சிகளை யு.சி.சி.என். ஊக்குவிக்கிறது.

தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னை பாரம்பரிய இசைக்கு புகழ்பெற்றது. இசைத் துறையில் சென்னையின் பங்களிப்பு காரணமாக UCCN கடந்த 2017 அக்டோபர் மாதம் சென்னை மாநகரை **"இசை நகரம்"** (City of Music) என அறிவித்தது. யுனெஸ்கோவின் படைப்பாற்றல் திறன் கொண்ட நகரங்களுக்கான பட்டியலில் இந்தியாவிலிருந்து வாரணாசி, ஜெய்பூர் ஆகிய நகரங்களை தொடர்ந்து மூன்றாவதாக சென்னை இடம் பெற்றுள்ளது. இதுவரை உலகம் முழுவதும் 31 நகரங்கள் இசை நகரங்களாக UCCN–ஆல் அறிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குபட்ட பகுதிகளில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் நடத்திடவும், பல்வேறு கலைஞர்களுக்கு சர்வதேச வாய்ப்பிணை ஏற்படுத்திடவும் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையாளர் தலைமையில் இணை ஆணையாளர் (வ (ம) நி) அவர்கள், தமிழ்நாடு அரசு கலை மற்றும் பண்பாட்டு துறை, ஆன்மஜோதி, கலாக்ஷேத்ரா அறக்கட்டளை, மியூசிக் அகாடமி, பாரதிய வித்யா பவன் மற்றும் ஸ்ருதி அறக்கட்டளை

ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது பாரம்பரிய கலைகள் முதல் நவீன கலைகள் வரையிலான பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்தி அதில் பொதுமக்களை பங்கேற்க செய்து இசை மற்றும் கலாச்சாரத்தினை பொதுமக்களிடையே கொண்டு செல்லவும், இசை, நடனம் மற்றும் பிற துறை கலைஞர்களை உலக நாடுகளில் உள்ள பிற நகரங்களுடன் இணைந்து செயலாற்றுவதையும் முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.

மேற்கூறிய நடவடிக்கைகளினால் பார்வையாளர்களின் செயல்திறனை பரந்த அளவில் கொண்டு செல்லவும், ஈடுபாட்டை அதிகரிக்கவும், கலைஞர்களின் படைப்பாற்றலை அதிகரிக்க செய்யவும் முடியும். மேலும், பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் நமது பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம் குறித்து பொதுமக்களிடையே கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள பூங்காக்கள் பொது இடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளன. வருகின்ற ஜூலை 20ம் தேதி சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் டவர் பூங்காவில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

அடுத்த கட்டமாக, உலகின் பல்வேறு பகுதிகளிலுள்ள பாரம்பரிய கலாச்சார துறைகளை சார்ந்த கலைஞர்கள் மற்றும் இடங்களை கண்டறிந்து ஒருங்கிணைப்பாளர்களுடன் இணைந்து நிகழ்ச்சிகளை நடத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**